Read the Bible in 40 days
CHALLENGE

ஒபதியா

ஏதோமின் மீதான தண்டனை

புத்தகத்தை ஆக்கியோன்

- ஒபதியா என்றால் “தேவனின் அடிமை” என்று அர்த்தம்
- ஒபதியா என்ற பெயரைத் தவிர இவனைப்பற்றி வேறு தகவல்கள் தரப்படவில்லை.
- வேதாகமத்தில் 13 ஒபதியாக்கள் இருக்கிறார்கள் இவர்களில் ஒருவர் இதை எழுதியிருக்கலாம்.
- ஆகாபின் தளபதிகளில் ஒருவனாயிருந்து கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை கெபியில் ஒளித்து வைத்த ஒபதியா (1இரா 18:3)
- யூதாவின் பட்டணங்களில் நியாயப்பிரமாணத்தை கற்பிக்க யூதாவின் ராஜாவான யோசபாத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட ஒபதியா (2நாளா 17:7)
- யூதாவின் ராஜாவான யோசியாவின் காலத்தில் ஆலயத்தை பழுது பார்க்கையில் மேற்பார்வையாளனாயிருந்து உதவிய ஒபதியா (2நாளா 34:12)
- நெகேமியாவின் நாட்களில் ஆசாரியனாக இருந்த ஒபதியா (நெகே 10:5)
- ஒபதியா பழைய ஏற்பாட்டின் மிகச்சிறிய புத்தகம்.
- இது ஏதோமுக்கு எதிரான தீர்க்கதரிசன புத்தகம்.

- அதிகாரம் 1
- வசனங்கள் 21

ஏதோமின் பின்னணி

- ஒபதியாவின் தீர்க்கதரிசனம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அதற்குக் காரணம் அது யூதாவைக் குறித்தோ அல்லது இஸ்ரவேலைக் குறித்தோ தீர்க்கதரிசனம் உரைக்காமல் ஏதோம் தேசத்தின் பாவங்களையும் அதன் மீது வரவிருக்கும் தண்டனையைக்குறித்துமே பேசுகிறது.
- எதோமியர்கள் ஈசாக்கு ரெபேக்காள் ஆகியோரின் குமாரனும் யாக்கோபின் சகோதரனுமான ஏசாவின் சந்ததியார் (ஆதி 25:19-34). ஏசாவுக்கு கொடுக்கப்பட்ட புனைபெயர் “ஏதோம்”. ஏதோம் என்றால் சிவந்த என்று பொருள். ஒருவேளை அவன் சிவந்த ரோமம் உள்ளவனாயிருந்ததினால் அந்தப்பெயர் வந்திருக்கலாம்.
- இறுதியாக ஏசா சேயீர் மலைநாட்டில் குடியேறினான். ஓரியர்கள் என்று அழைக்கப்பட்டவர்களோடு இவனது சந்ததி கலந்தது. (ஆதி 36:8-46)
- ஏசா தனது சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியம் பண்ணினான்.
- சேஷ்டபுத்திர பாகத்தை கொண்டிருக்கிறவன் தேவனோடு தொடர்பிலிருக்கி றவன், அவனே அந்தக் குடுப்பத்தின் ஆசாரியன், அவனோடு தேவனுடைய உடன்படிக்கை இருந்தது, தேவனோடு ஐக்கியமாயிருக்கிறவன்.
- ஏசா சொன்னதின் உண்மையான பொருள் என்னவெனில் “தேவனோடு ஐக்கியமாயிருப்பதை காட்டிலும் ஒரு கோப்பை கூழே எனக்கு வேண்டும்”.
- நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லுகிறார்: ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்; மல்கியா 1:2-3
- யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்; என்று தேவன் சொன்னது நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறதல்லவா?
- அதற்கான விளக்கம் ஒபதியாவின் புத்தகத்தில் இருக்கிறது.

ஏதோமின் பின்னணி

- எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் வாக்களிக்கப்பட்ட நிலப்பரப்பிற்கு செல்லுகையில் எதோமியரின் நாட்டை கடந்துபோக முயன்றபோது அதற்கு அனுமதிக்கவில்லை. (எண் 20:14-21)
- ஏதோமியர் சவுலுக்கு எதிர்த்து நின்றார்கள் தாவீதும், சாலொமோனும் அவர்களை வெற்றிகொண்டார்கள் (1சாமு 14:47, 2சாமு 8:14, 1இரா 9:26)
- யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் காலத்தில் யூதாவின் மீது தாக்குதல் தொடுக்க வந்த மோவாபியரோடும், அம்மோனியரோடும் ஏதோமியரும் சேர்ந்துகொண்டு வந்தபோதும் தேவன் யூதாவிற்காக யுத்தம் செய்து அவர்களை தோற்கடித்தார் (2நாளா20:1-27 துதியினால் ஜெயித்த பிரபலமான யுத்தம்)
- ஏதோமியர் யூதாவின் ராஜாவான யோராமிற்கு எதிராக கலகம்செய்து வெற்றிபெற்றார்கள் (2இரா 8:16-22)
- யூதாவின் ராஜாவான அமத்சியா அவர்களை அடக்கி மறுபடியும் அவனது ஆளுகைக்குள் கொண்டு வந்தான் (2இரா 14:9-11)
- ஏதோமியர் மீண்டும் யூதாவின் ராஜாவான ஆகாஸின் நாட்களில் தாக்குதல் நடத்தினார்கள் (2நாளா 28:17)
- நூற்றாண்டுகள் கழித்து ராஜாவான பெரிய ஏரோது ஒரு ஏதோமியன் (லூக் 1:5)
- ஒபதியா தீர்க்கதரிசனம் உரைத்ததாவது
  - ஏதோம் "நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப்போவாய்"
  - ஏசாவின் வம்சத்தில் மீதியிராதபடி பட்சிக்கப்படுவார்கள்;
  - கிபி 70ம் ஆண்டின் அழிவோடு அவர்கள் வரலாற்றிலிருந்து மறைந்து போனார்கள்.

ஏதோமின் பெருமை

1. ஏதோமியர்கள் தங்கள் இயற்கை பாதுகாப்பை குறித்து பெருமையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

- ஒரு காலத்தில் ஏதோமியரின் தலைநகராக இருந்த சீலா என்று அறியப்பட்ட புராதன நகரமான பெட்ரா இயற்கையாக மிகப்பாதுகாப்பான இடம்.
- இந்த நகரம் பாறைகளுக்கிடையே குடைந்து உருவாக்கப்பட்டிருந்தது. இதற்கு செல்ல ஒரு மைல் நீளமான ஒடுங்கிய பள்ளத்தாக்கு பாதை மாத்திரமே உண்டு.
- இந்த பள்ளத்தாக்கு பாதையின் முடிவில் கற்பாறைகளில் குடைந்து உருவாக்கப்பட்ட அழகிய நகரம் இருந்தது. ஒரு இராணுவதினாலும் அழிக்கவே முடியாது என்று தோன்றியது.

2. ஏதோமியர்கள் தங்கள் ஞானத்தை குறித்து பெருமையுள்ளவர்களாய் இருந்தார்கள்.

- ஏதோமின் மனிதர்கள் குறிப்பாக தேமான் நகரத்தார் அவர்களது ஞானத்திற்கு புகழ்பெற்றவர்களாயிருந்தார்கள்.
- கிழக்கத்திபுத்திரர் என்று பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டவர்கள் ஏதோமியர்களே.
- கிழக்கத்திபுத்திரரின் ஞானம் குறித்து 1இரா 4:30ல் காணலாம்.
- எரேமியா 49:7ல் தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளைவிட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ?

3. ஏதோமியர்கள் தங்கள் கூட்டுச் சேர்ந்திருக்கிறவர்களை குறித்து பெருமை யுள்ளவர்களாய் இருந்தார்கள். அந்தக் கூட்டணியின்மேல் நம்பிக்கை வைத்தார்கள்.

- அவர்களோடு சமாதானமாயிருந்த மனிதர்கள் 1:7
- அவர்கள் கூட்டுச்சோந்திருக்கிறதினால் பலம் மிக்கவர்களாயிருக்கிறார்கள் என்று நம்பி அந்தப்பலத்தினால் பெருமையுள்வர்களாயிருந்தார்கள்.

இந்தப் புத்தகத்தின் முக்கிய பகுதிகள்

I. ஏதோம் - அதன் அழிவு 1-16

A. ஏதோமிற்கு எதிரான குற்றச்சாட்டு 1-9

B. ஏதோமின் குற்றம் 10-14

C. ஏதோமின் அழிவு 15-16

II. இஸ்ரவேல் - அதன் மறுசீரமைப்பு 17-21

A. இஸ்ரவேலின் நிலை வச 17

B. இஸ்ரவேலுக்கான அழைப்பு வச 18

C. எல்லாவற்றின் நிறைவு வச 19-21

(ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்)